# விடுதலைப்புலிகள்எவரும் சரணடையமாட்டார்கள்

## மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எவரும் சரண் அடைவதை எதிர்பார்க்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

வெசாக் பண்டிகையை முன்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 33 வைகாசி 14 துல்ஹஜ்தா 13 இதழ் 106

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-05-1991

## கப்டன் ரமேஷ் புகழுடல் தீயுடன் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவனில் நேற்று முன் தினம் சிறிலங்கா இராணுவத்துடன் இடம்பெற்றநேரடி மோதலில் கப்டன் ரமேஷ் [பரமலிங்கம் ரஞ்சன்- அச்சுவேலி] என்ற விடுதலைப்புலி

(4ம் பக்கம் பார்க்க)

## நான்கு பொதுமக்கள் வெட்டிக் கொலை

(மட்டக்கவப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பழுகாமம் என்னும் கிராமத்தில், சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோவினரும் இணைந்து நான்கு பொதுமக்களை வெட்டிக் கொன்ற

[4ம் பக்கம் பார்க்க]

வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு

# பேச்சுவார்த்தையுடன் கூடிய அரசியல் தீர்வே சரியானது!

## ராணுவ துறையிடம் ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமான ஒரு அரசியல் தீர்வே சரியானது என ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தமது பாதுகாப்பு அதிகாரிகளிடம் மீண்டும் வலியுறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த பதினொரு மாதகாலமாக நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், இராணுவ ரீதியில் இலங்கை அரசாங்கத்துக்கு வெற்றியைக் கொடுக்கத் தவறியிருப்பதை அடுத்தே அவர் தமது இந்த எண்ணத்தை வலியுறுத்தியிருப்ப

(4ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

[வேலணை]

ஊர்காவற்றுறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் குடிமனைகளைநோக்கி பாரிய ஷெல்தாக்குதல்களையும் ஹெலிபர் தாக்குதல்களையும் நேற்று நடத்தினார்கள்.

நேற்று பி ப. 2 மணியிலிருந்து இத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனுல் பல வீடுகள் சேதமடைந்தன.

இம்முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் புளியங்கூடல் சரவணைப்பகுதியிலும் விழுந்து வெடித்தன. [152- 75]

## வடமேற்கு கடற் பகுதியில் கடற்படை உஷார் நிலையில்!

(கொழும்பு)

இலங்கை கடற்பகுதியில் கடற்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வடமேற்கு கடற்பகுதியிலேயே இவ்வாறு தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன,

தமிழ்ப்போராளிகளின் நட

[4ம் பக்கம் பார்க்க]

## உதவி வழங்கும் நாடுகள் கவலை

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

குவைத்தில்

## 3,325 இலங்கையர் காணமல்போய்விட்டனர்

(குவைத்நகர்)

குவைத்தினுள் ஈராக்கிய படைகள் நுழைந்தபின் இதுவரை குவைத்தில் 3,325இலங்கையரைக் காணவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

8,400 பேரைக் காணவில்லை என முதலில் அறிவிக்கப்பட்டபோதும் பின் 75 இலங்கையர் ஒரு பகுதியிலிருந்து மீட்கப் பட்டனர்,

மிகுதி 3,325 பேரையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் தேவநாயகம் மனைவி, வேலையாள் கொலை!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவ மேஜர் ஜெனரல் ஈ. ஜீ. தேவநாயகமும் அவரது மனைவியும், வீட்டு வேலையாளும் மேஜர் ஜெனரலின் 15 வயது மகனுல் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெள்ளவத்தை ஹமிம் டன் லேனில் இச்சம்பவம்

(4ம் பக்கம் பார்க்க)

## சோனியா தலைமைக்கு முழுமையான ஆதரவில்லை

[புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக திருமதி சோனியா காந்தி தெரிவு செய்யப்படுவது குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே முழுமையான ஆதரவு இல்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க திருமதி சோனியா காந்தி மீண்டும் மறுத்தால் கட்சியின் தலைவராக திரு பி. வி. நரசிம்மராவ் தெரிவு செய்யப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. [க)

## காங்கிரஸ் புதிய தலைவர் நரசிம்மராவ்?

[புதுடில்லி]

இந்திராகாங்கிரஸ்கட்சியின் புதிய தலைவராக திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவு செய்யப்படுவாரென்று தெரியவருகிறது.

கட்சியின் செயற்குழு நாளை புதன்கிழமைகூடும்போது திரு. நரசிம்மராவை தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி சோனியா காந்தி கட்சியின் தலைமைப் பதவியை ஏற்க மறுப்புத் தெரிவித்திருப்பதையடுத்தே திரு. நரசிம்மராவைத் தலைவராகத் தெரிவு செய்வதுஎன கட்சியின் மூத்த அங்கத்தவர்கள் மத்தியில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

## ராஜீவ் கொலை விசாரணை: நீதியரசர்வர்மா தலைமையில் கமிஷன் நியமனம்

[புதுடில்லி]

ராஜீவ் காந்தி கொலையுண்டது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ எஸ். வர்மா தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்சப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குள் இந்தக் கமிஷன் அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. (க)

## விசாரணை முடியும் வரை சடலம் பாதுகாக்கப்படும்

[புதுடில்லி]

ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் பெண்ணின் சடலம், பதப்படுத்தப்

[4ம் பக்கம் பார்க்க]

## மற்றெரு வேட்பாளர் கொலை

(சண்டிகார்]

பஞ்சாப் மாநிலத்தில் சுயேட்சை வேட்பாளர் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அனுதரவான நிலையில் இவ

[4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆண்டு - 5)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (மூன்றாவது) 2-6-91 ஞாயிறு மு. ப. 8-00 / மு. ப. 10-30, 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி.ப. 4-00 மக்கள் வைத்தியசாலை முன்பாக, குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் நடைபெறும். பதிவு செய்யவும். (Paper Class) ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

(சி-4770)

### விற்பனைக்கு

பாட்ஸ் கடைக்கு உகந்த புதிய முதிரை அலுமாரி இரண்டு, சோக்கேஸ் மூன்று உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 49/4, சிறும்பியடி, யாழ்ப்பாணம். (யாழ். ஸ்ரீதர் படமாளிகை பின் பக்கம்.)

(சி 4779)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விக் கந்தோரில் பயிலுநர் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக போதனாசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் இடம்பெற்றது.

கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது. சுமார் 25க்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீசை நடைபெற்றது. (56(

## 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அதிபர்கள் கொத்தணி அதிபர்களிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்று கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (152)

## பாடசாலை மாணவர் வைத்திய பரிசோதனை

(உடுவில்)

உடுவில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் சுகாதார பிரிவினர் சென்று பாடசாலை மாணவர்களுக்கான வைத்திய பரிசோதனைகளையும் வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றனர்.

உடுவில் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் திரு. கே. சிவபாலராசா, தெல்லிப்பழை உதவி வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் விவேகானந்தனின் உதவியுடன் இப்பரிசோதனைகளை நடாத்திவருகின்றார். (109)

## சுருவிலில் கடும் வெப்பம்

(ஊர்காவற்றுறை)

சுருவில் பகுதியில் தற்பொழுதுள்ள கடும் வெப்பத்தாலும் பட்டினியாலும் அநேக மாடுகள், வளர்ப்பு நாய்கள் இறந்துள்ளன. இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்தனர். (59)

## ★ இன்று ‘மயில்’ நூல் வெளியீடு

[வட்டுக்கோட்டை]

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் நாடக நூலான ‘மயில்’ நூல் வெளியீட்டுவிழா நல்லூர் கம்பன் கோட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா வெளியீட்டுரை நிகழ்த்துவார். கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை, அதிபர் அநு.வை. நாகராஜன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். [139]

உதைபந்தாட்டம்:

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினுல் விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் கழகமும், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் மோதுகின்றன.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியில், நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் கலைவாணி விளையாட்டுக் கழகத்தை 8 - 1 கோல்களால் மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எம். விமலதாஸ் மத்தியஸ்தம்வகித்தார். [வி]

## பழைய இடத்தில் மருந்தகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு அரசினர் மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் இன்றிலிருந்து மண்டைதீவில் இயங்கவிருக்கிறது.

மேற்படி வைத்திய நிலையத்தின் பொறுப்பு அதிகாரியையும் மற்றும் அங்கு கடமையாற்றும்ஊழியர்களையும் மண்டைதீவில் கடமையாற்றும்படி சேவைகள் பணிப்பாளரால் பணிக்கப்பட்டுள்ளார்கள். (153)

## மாணவர்கள் மதிய உணவு முத்திரை

[மானிப்பாய்]

மானிப்பாய்பகுதிபாடசாலைகளில் பெப்ரவரி மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இம்முத்திரைக்குரிய பொருட்கள் இங்குள்ள ப. நோ. கூ. சங்க கிளைகளுக்கு வந்துசேரவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## கலந்துரையாடல்

(உடுவில்)

மருதனுமடம் கோட்டாக் கல்வி பாடசாலைகளின் கொத்தணி அதிபர்கள், உதவியாயாளர்கள் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்குமருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பற்றி ஆலோசனை செய்யப்படும். (109)

## சங்க உறுப்பினர்களுக்கு மண்ணெண்ணை விநியோகம்

[பண்டத்தரிப்பு]

பண்ணாகம் மக்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் அறுபது உறுப்பினர்களுக்கு உப உணவுச் செய்கைக்காக விதை, உரம் மண்ணெண்ணை ஆகியன கடனடிப்படையில் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

உப உணவுச் செய்கைக்காக சங்க உறுப்பினர்கள் 82பேர் தமக்கு உரம், விதை, மண்ணெண்ணை என்பன வழங்குமாறு கேட்டுவிண்ணப்பங்களை அனுப்பியிருந்ததாகவும் இவர்களில் 60 பேருக்கு மட்டுமே மேலிடம் இவற்றை சங்கத்திற்கு உடாக வழங்கியிருந்ததாகவும் சங்கப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். [72]

## தடுப்பு மருந்து தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்தில் சிறுவர் நல சிகிச்சை நிலையத்தில் குழந்தைகளுக்கு போடப்படும் முக்கூட்டுத் தடுப்பு மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடுநிலவுகின்றது. (72)

மண்கும்பானில்

## ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் தற்காலிக தலைமைக் காரியாலயத்தை மண்கும்பானில் திறந்துள்ளது.

கிராமிய வங்கியும் மண்கும்பானில் இயங்கிவருகின்றது. ஓய்வூதியம் பெறுவோர் அங்கு சென்று ஓய்வூதியத்தைப்பெறுமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார் [152]

## பத்தாயிரம் ரூபா மருந்துவகைகள்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரத்திலுள்ள இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான சித்த ஆயுர்வேத மருந்துவகைகள் பெறப்பட்டுள்ளது.

இதனால் இந்த வைத்தியசாலையில் நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (7)

## ஆலய மடத்தில் பாலர் பாடசாலை

(பருத்தித்துறை)

தென் புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை, ஆலய மடத்தில் பாலர் பராமரிப்பு கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இப்பாலர் பாடசாலை ஆசிரியர்களாகக் கடமையாற்றக்கூடிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்கள் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் ஆலய தருமகர்த்தா சபைச் செயலாளருக்கு விண்ணப்பிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## கிராமிய விவசாயக் கழகம்

(உடுவில்)

மானிப்பாய் வடக்கு கிழக்கு மேற்கு கிராம சேவையாளர் பிரிவினை உள்ளடக்கி மானிப்பாய் கிராமிய விவசாயக்கழகம் ஒன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

இக்கிராமிய விவசாயக்கழகம் மானிப்பாய் வடக்கில் எண்பத்தி நான்கு விவசாயிகளுக்கும், மானிப்பாய் தெற்கில் இருபத்திநான்கு விவசாயிகளுக்கும் வேண்டிய மண்ணெண்ணை, உரம், விதை தானிய பொருட்களை அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவியுடன் வழங்கியுள்ளது. (109)

## குரக்கன் மா பிஸ்கட்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு உற்பத்திக் குழுவின் மகளிர் குழுவினால் பரீட்சார்த்தமாக குரக்கன் மாவினால் தயாரிக்கப்பட்ட பிஸ்கட் பெருவெற்றியளித்துள்ளது.

கடந்த மேதினத்தை ஒட்டி நடாத்தப்பட்டபோட்டியிலும் இந்த பிஸ்கட் பரிசு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (72)

## டாக்டர்களுக்கு பெற்றோல் வழங்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் டாக்டர்களுக்கு அவர்களின் உத்தியோகபூர்வ போக்குவரத்திற்காக ஒரு குறிப்பிட்ட அளவு பெற்றோலை வழங்குவதற்கு யாழ். சுகாதார திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பிட்ட டாக்டர்கள் தங்கள் மோட்டார் வாகனங்களின் வரி அனுமதிப்பத்திரம் பதிவுப்புத்தகம் ஆகிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் இந்தப் பெற்றோல் பணத்திற்கு வழங்கப்படும், (72)

## மிளகாய் பறித்த பெண்களை நோக்கி இராணுவம் சூடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் நானாட்டான் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா படையினர் மிளகாய் பறித்துக்கொண்டிருந்த பெண்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இருவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முருங்கனைச் சேர்ந்த மரியம்மா பெருமாள் (36 வயது) என்பவரே காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (56)


# Computer Programming

★ **Programming in Basic Language**
50 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம்

★ **d BASE III** *
40 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 2 மாதம்

★ **Lotus 1 2 3**
பயிற்சிக் காலம்: 2 மாதம்.

★ **Word Processing**
காலம்: 2 மாதம்.

★ **Cobol**
காலம்: 3 மாதம்.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்: 02-06-91 (சனி, ஞாயிறு)
06-06-91 (கிழமை நாட்கள்)

விபரங்களிற்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.

கிளைகள்:

**Modern Education Center,**
Nelliyady, Karaveddy.

**Brillian Institute,**
Chavakachcheri.

**Vinyls Institute,**
K. K. S. Road, Chunnakam

★ குறிப்பு; தொழில் புரிவோர் வசதியை முன்னிட்டு சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(ஏ-1236)

## ஆஸ்திரிய விமானம் பாங்கொக் அருகே

# நடுவானில் வெடித்துசிதறியது

# 223 பயணிகள் கோரப் பலி!

## சிதைவுகள் வீழ்ந்து காடும் தீப்பற்றியது

(பாங்கொக்)

**ஆஸ்திரிய நாட்டு பயணிகள் விமானமொன்று நேற்று அதிகாலை பாங்கொக்கிற்கு அருகில் நடுவானில் வெடித்துச் சிதறியதில் அதிலிருந்த 223 பேரும் கோரமாகப் பலியாகியுள்ளனர். எரிந்த நிலையில் சிதைவுகள் வீழ்ந்ததில் காடொன்றும் தீப்பற்றிக் கொண்டது.**

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிலிருந்து 213 பயணிகளுடனும் 10 விமான சிப்பந்திகளுடனும் நேற்று அதிகாலை ஆஸ்திரிய நாட்டுத் தலைநகர் வியன்னு நோக்கிப் புறப்பட்ட '767' என்ற தனியார் கம்பனிக்கு சொந்தமான இப்பயணிகள் விமானம் பாங்கொக்கிலிருந்து வடமேற்கே சுமார் 100 மைல் தூரத்தில் நடுவானில் வெடித்துச் சிதறியது.

நடுவானில் அதிஉயரமான பகுதியிலிருந்து மிகப்பெரிய தோர் தீப்பந்து கீழ்நோக்கி மிக வேகமாக வந்ததை தாய்லாந்து கிராமப்புற மக்கள் பலர் நேரில் கண்டுள்ளனர்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்கு அண்மையில் இவ்விமானம் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. சிதறிய விமானத்தின் பல பாகங்கள் காட்டுப் பகுதியிலும் கிராமப் புறமொன்றிலும் வீழ்ந்தது. எரிந்த பாகங்கள் வீழ்ந்ததால் காடும் தீப்பற்றிக் கொண்டதாக முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

இவ்விமானத்தில் ஹொங்கொங்கிலிருந்து 100 பயணிகளும் பாங்கொக்கிலிருந்து 88 பயணிகளும் வேறு நாட்டவர்களும் இருந்தனராம். இவ்விமானத்தின் பிரதம பைலட் முன்னுள் 'விமான சர்க்கஸ்' வீரர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துக் குறித்து பாங்கொக் விமான நிலைய ஊழியர்கள் அனைவரும் பலத்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்புப் பணிக்காக இரு ஹெலிகொப்டர்களும் தீயணைப்புப் படைப் பிரிவும் காட்டுப் பகுதிக்கும் கிராமப் பகுதிக்கும் விரைந்துள்ளதாம். (சி)

## பெரும் நெருக்கடி நிலையில் இந்திரா காங்கிரஸ் கட்சி

(புதுடில்லி)

ராஜீவ் காந்தியின் கொலையையடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராஜீவின் பின் யாரை நியமிக்கலாம் என்பதில் கட்சி உறுப்பினர்களுக்கிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவுகிறது.

திருமதி சோனியா காந்தி எக்காரணம் கொண்டும் இக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கப்போவதில்லை என்று திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

இந்திரா காங்கிரஸின் மூத்த உறுப்பினர்கள் பலர் இப்பதவிக்குத் தகுதியானவர்களாக இருந்தும் அவர்களைத் தெரிவுசெய்வதில் கட்சிக்குள் இழுபறி நிலைதோற்றியுள்ளது.

இதேவேளையில் இக்கட்சியின் தலைவராக யார் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்களுக்கு ராஜீவ் காந்தியின் அளவுக்குச் செல்வாக்கு மக்களிடத்தில் இருக்கிறதா என்பது பற்றியும் சிந்திக்கவேண்டியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கட்சியின் தலைமைப்பொறுப்பை ஏற்குமாறு திருமதி சோனியா காந்திக்கு உருக்கமான வேண்டுகோள் கட்சியின் பல மட்டங்களிலிருந்தும் விடுக்கப்பட்டும் அவர் அதனை ஏற்க மறுத்துவருகிறார்.

கட்சியின் மூத்த உறுப்பினர் திரு. பி.வி. நரசிம்மராவ், திரு. என். டி. திவாரி உட்பட பலரின் பெயர்கள் தலைமைப் பதவிக்கு அடிபட்டபோதும் தலைவரை தெரிவுசெய்யும் நடவடிக்கை நாளை புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாளை காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடுகிறது.

## "ரிவோல்வருடன் ஆரம்பித்த போராட்டம் பசிலன் வரை பரிணமித்துள்ளது"

(யாழ்ப்மாணம்)

"பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு ரிவோல்வருடன் தொடங்கிய விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் இன்று முழு அளவில் பரிணமித்து 'பசிலன்ஷெல்' தயாரிப்பு வரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் கும ரப்பா, பொன்னம்மான் போன்ற பெயர்களிலும் பல கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்படலாம்."

இவ்வாறு விடுதலைப்புலிகள் முக்கியஸ்தரும் கவிஞருமான மு. வே. யோ. வாஞ்சிநாதன் யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்ற கலை நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டபோது கூறினர்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், தலைவர் திரு. பிரபாகரன் தலைமையில் பிஞ்சு இளம் உள்ளங்கள் இன்றுவரையில் எம்விடுதலைப் போராட்டத்தில் கூடுதல் பங்களிப்பினை செய்துள்ளனர்.

எல்லையிலிருந்து எதிரி நாள்தோறும் தொல்லை தந்து கொண்டிருக்கிறன். நமது சொந்த மண்ணின் எல்லையிலிருந்து எதிரியை விரட்டியடிக்க வேண்டும்இதற்குநாம் சொந்த மண்ணிலிருந்து கொண்டு ஒன்று திரண்டு பொராட வேண்டும். எமது இனம் ஒன்று திரண்டு போராடுவதன் மூலமே எதிரியினை தமிழீழப் பிரதேசத்திலிருந்து முழுமையாக வெளியேற்ற முடியும்.

வவுனியாவிலிருந்து இராணுவம் ஓமந்தைக்கு வந்தது. அது போல் வலந்தலையிலிருந்து வட்டுக்கோட்டைக்கும் இராணுவம் வரலாம். இதற்கு தமிழர்கள் விடுதலை உணர்வோடு ஒன்று திரண்டு போராட வேண்டும். போராடினுல்தான் எம்மை அழிக்க வந்த எதிரி எம்மைவிட்டு ஓடுவான் என்றுர். (56)

## இராசி பலன்

28-05-1991

செவ்வாய்க்கிழமை

பூரணை மாலை 5-32 வரை.
அனுஷம் பி. இ. 12-53வரை
இராகுகாலம்: பகல் 2-52 முதல் 4-22 வரை
சுபநேரம் காலை 10-22 முதல் 11-52 வரை.
அக்கினிநாள் முடிவு.

மேஷம்; அகந்தை கருத்து முரண்பாடு. தொழில்கஷ்டம்.

இடபம்: விருந்தோம்பல். மனக்களிப்பு, வாக்குவன்மை.

மிதுனம்: முதியோர் ஆசி. கல்வியில் புகழ். குடும்பசுகம்.

கடகம்: தொழில் பாதிப்பு நடைப் பயணம். சகோதரர் கவலை.

சிங்கம்: அவமதிப்பு அதிகாரிகள் துன்பம். இனசன உதவி.

கன்னி: தெய்வீக செலவு. தற்பெருமை. குடும்ப கௌரவம்.

துலாம்: வீண் யோசனை. அன்னிய வாசம். தொழில் நஷ்டம்

விருச்சிகம்; மனதில் உற்சாகம். மனைவியால்புகழ். குடும்ப உல்லாசம்.

தனுசு: பகைவர் உதவி. புதிய சிந்தனை. புத்திரர் பெருமை.

மகரம்: வீண் வம்பு. தொழில் போட்டி. அலைச்சல் மிகுதி.

கும்பம்: பயணங்களால் துயரம். குடும்பமோதல். அசதி

மீனம்; நினைத்தகாரிய தடை. பொருளாதார கஷ்டம் வாக்கு கலகம்.

- ஜோஸ்யர்

## காரைநகர் மாணவர்களுக்கு கொத்தணி அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பாடசாலைகளில் ஆண்டு 5ல் இவ் ஆண்டு கற்று பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களை நாளைபுதன்கிழமை மாலை 3 மணிக்கு பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாலயத்திலும், சுழிபுரம் விக்டோரியா கல்லூரியிலும் சந்தித்து விண்ணப்பங்கள் அனுப்புவதற்காக தமது பெற்ருேர் சகிதம் வருமாறு வேண்டப்படுகின்றனர்.

30ம் திகதி வியாழக்கிழமை விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதுவரை மாசி மாதத்திற்குரிய உணவு முத்திரையை பெருத மாணவர்களும் புதன்கிழமை தமது முத்திரைகளை அன்றைய தினம் பெற்றுக் கொள்ளலாம் என காரைநகர் கொத்தணி அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் தெரிவித்துள்ளார்.

## எருப்பாவனையும் விவசாய உற்பத்தியும்

தாவரங்கள் செழிப்பாக வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுப்பதற்கு தரையிலே பயிருணவுப்பொருள்கள்கொண்ட மண்ணமைப்பு காணப்படுதல் அவசியமாகும்.

தரையிலே விவசாயப் பொருள்கள் உற்பத்தியாக்கப்பட்டு அவற்றின் விளைபொருள்கள் வெளியேற்றப்படும்போது ஊட்டச்சத்துக்கள் குறைந்து கொண்டு செல்கிறது. இதைவிட களை அகற்றினுலும் நீரினுல் மண் கழுவப்பட்டுச் செல்லும்போதும் மண்ணின் தன்மையில் மாற்றம் ஏற்படுகிறது.

மண்ணின் தன்மையில் ஏற்படும் மாற்றத்தைக் குறைக்க எரு வகைகளை உபயோகிக்கலாம். இவை மண்ணின்சேதன உறுப்பு பொருள்கள் குறைவடையாமல் பாதுகாக்கும். மிருகங்களின் எச்சங்கள் உக்கிச் சிதைவடையும் போதும் பல வகை சேதனப் பொருள்கள் மண்ணுடன் கலந்து கொள்கின்றன.

எருவிலே பயிருணவுப் பொருள்கள் அதிக அளவு இல்லாதபோதும்கூடுதலான அளவு பிரயோகிக்கும்போது அவை வேண்டிய பயிருணவை அளிக்கின்றன.

மணல்தரைகளுக்கும், கனதியான களித் தரைகளுக்கும் அதிக அளவில் எரு இடுதல் அவசியமாகும் களித்தரையின் ஒட்டும் கட்டிபடும் தன்மையை சேதனப் பொருள்கள் நீக்கி அதனைப் பொலபொலப்பானதாக மாற்றி அமைக்கும். மணற்தரைகள் நீரைப்பிடித்து வைக்கும்இயல்புஇல்லாதவை. எருவகைகள் இக்குறையை நிவர்த்திசெய்கின்றன. இதனுல் வேர் வளர்ச்சி சிறப்படைந்து அகத்துறிஞ்சல் அதிகரித்து சாகுபடியும் அதிகரிக்கும்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்.

## ஊழியர் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்)

வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள உதவி விவசாயப்பணிமனையில் எழுதுவினைஞர்கள், தொழில் நுட்ப வியலாளர்கள் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதால், இந்த அலுவலகத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும் பற்றுக்குறை நிலவுவதாகத் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (56)

## பலதும் பத்தும்

### கி வா ஜவின் சிலேடை!!

ஒருவருக்குப் பல்வலி வந்து மிகவும் துன்புற்ருர். கி. வா. ஜகநாதன் அவரைக் காணச் சென்ருர். முகத்தை அடிக்கடி சுளித்துக் கொண்டே அவர் பேசினர். என்ன உடம்புக்கு என்று அவரை பரிதாபத்துடன் கேட்டார் கி. வா. ஜ. பெரியவரோ 'பல்வலி' என்று பதில் கூறினர். கி. வா. ஜவோ அமைதியாக, ஒரு வலி வந்தாலே சங்கடம். பல் வலி வந்தால் சொல்லவேண்டுமா? என்ருர் கி. வா. ஜ.

உறவினர்கள் அனைவருக்கும் கி. வா. ஜவின் பேச்சு சிரிப்பைத் தந்தது.

— ஞானி

## அதிபர்களுக்கான
# போட்டிப் பரீட்சை

[வட்டுக்கோட்டை]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இலங்கை அதிபர்கள் சேவை மூன்றாம் தரத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஜூன் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பரீட்சை நிலையங்களிலும் நடாத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளின் முகவரிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளையில் 1ம், 2ம் தர அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சைகள் ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறலாமெனவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார். [139]

### மருந்துகள் அனுப்பப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நிருவாகத்தின் கீழுள்ள புங்குடுதீவு, நெடுந்தீவு வைத்தியசாலைகளுக்கு, இதுவரை இரண்டாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் அனுப்பப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (153)

### பதவி வெற்றிடங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நிருவாகத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளில், 10 டிஸ்பென்ஸர் பதவிக்கான வெற்றிடங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மிக விரைவில் மேற்படி பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது.

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் சிற்றூழியர்களிடமிருந்து தாதிமார் பயிற்சிக்குத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை ஜூன் மாதம் 10ம் திகதிக்கு முன்பாகச் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ளனர். [153]

### பயிற்சி நெறி

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு ஊழியர் தராதரப்பத்திர உயர்தரப் பயிற்சிநெறி, ஜூன் மாதம் 3ந் திகதி யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கூட்டுறவு ஊழியர்களும், தகுதிபெற்ற தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் இப்பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். [153]

### மேஜர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது. சூட்டுச் சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் அங்கு சென்றபோது மேற்படி மூவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனராம்.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் பிரிகேடியராக கடமையாற்றி கடந்த வாரமே இவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றிருந்தார். சம்பவதினம் காலை இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க முன்னிலையில் கடமைப்பொறுப்பைஏற்றிருந்தார்.

அன்று மாலை இவர் வீடு திரும்பி சில மணிநேரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கி, கத்தி சகிதம் 15 வயது மகனை கைது செய்துள்ளனர். (சி)

### மகஜர் கையளிப்பு

[சென்னை]

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இந்திரா காங்கிரஸ் கட்சி, அ. தி. மு. க. தொண்டர்கள் பெருமளவில் கைது செய்யப்படுவது குறித்த மகஜர் ஒன்று தமிழக ஆளுநர் திரு. பிஷ்ம நாராயண சிங்கிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

அ. தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் சென்ற குழுவே மேற்படி மகஜரை தமிழக ஆளுநரிடம் கையளித்தது. [க]

## "உணர்வலைகள் மூலம்
# இறைவன் இருப்பதை உணர்ந்து கொள்கிறோம்"

(உடுவில்)

"சூடு நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. காற்று நம் கண்ணில் படுவதில்லை. ஆனால் சுடுகிறது, காற்று வீசுகிறது என்கிறோம். இவை உணர்வலைகள் மூலமாகவே உணரப்படுகின்றன. அது போலவே இறைவனும் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் உணர்வலைகள் மூலம் இறைவன் என்ற ஒரு சக்தி இருப்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம்".

இவ்வாறு இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இறை வழிபாடுகள் பற்றி உரையாற்றிய இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் கூறினார்.

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. அனு. வை. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில், "மனிதனுக்கு உடல்களைப்பு, உளக்களைப்பு ஆகியவை ஏற்படுவதை அறிந்துகொள்ளமுடியும். அதே போல உயிர்க்களைப்பு ஏற்படுவதையும் நாம் உணரமுடியும்.

உயிர்க்களைப்பு ஏற்படும் வேளையில்தான் நமக்கு முத்தியின்பம் கிடைக்கின்றது. உயிர்கள் பல்வேறு உருவவடிவில் பிறப்பெடுத்து களைத்து போகும் வேளையில்தான் இறைவன் நம்முடன் ஆட்கொள்ள விளைகின்றார். மாணிக்கவாசகர், புல்லாகிப் பூடாகி முனிவராய், தேவராய் என உயிர்கள் பல வடிவங்கள் எடுத்து களைத்து முத்தியடைவதை சிவபுராணத்தில் கூறுகிறார். (109)

### திருட்டு அதிகரிப்பு

(உடுவில்)

மருதனமடம் உடுவில் பகுதிகளில் திருடர் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு மருதனமடம் சந்தியில் உள்ள வயிரவர் கோவில் கதவுகள் பிரிக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த வைரவர் அங்கி மற்றும் கோவிற் பூசைக்குரிய பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மருதனமடம் சந்தியில் உள்ள நான்கு கடைகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சீற் கழற்றப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

உணவுசாலை, பலசரக்குகடை மருந்துக்கடை, புத்தகநிலையம் ஆகியவையே இவ்வாறு திருடப்பட்ட கடைகளாகும்.

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் 7-ம் கிளை உடுவில் மானிப்பாய் வீதியில் அண்மையில் உடைக்கப்பட்டு உணவுப் பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

இக்களவுகள்பற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன [109]

### குவைத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டுபிடித்து உதவுமாறு இலங்கை குவைத் அரசைக் கேட்டுள்ளது. எனினும் இவர்கள் உயிரோடுஇருக்கிறார்களா என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாக குவைத்தில் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்

குவைத்தின் முழுப் பகுதியிலும் தேடுதல் நடாத்திக்காணாமல் போன வெளிநாட்டவர்கள் பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனராம். (சி)

## ஆயுதப்பரிகரண மாநாட்டில்
### 37 நாடுகள் கலந்துகொண்டன

(டோக்கியோ)

ஆயுதப் பரிகரணம் சம்பந்தமான மாநாடு ஜப்பானின் புராதன நகர் சுகாஸ்ரோவில் நேற்று ஆரம்பமானது.

37 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம்மாநாட்டில் ஆயுதஉற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் யாவும் ஐ. நா. ஸ்தாபனத்தின் கீழ் பதிவுசெய்யப்படுதல்வேண்டும். பாரம்பரிய ஆயுதங்களின் விற்பனையை சீர்ப்படுத்தல், இரசாயன ஆயுதத்தடையை தீவிரமாக அமுல் நடத்தல், அணு ஆயுத தடையை கடுமையாக அமுல் நடத்தல் போன்ற முக்கிய விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

இதேவேளையில் இரசாயன ஆயுதங்களை தடைசெய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் அமெரிக்கா தன்வசமுள்ள இரசாயன ஆயுதங்களை அழித்துவிடும்என ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியிருப்பது குறித்து மாநாட்டு பிரதிநிதிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

### இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கப் பொதுக்கூட்டம் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் இன்றுசெவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## முன்னாள் அமைச்சர்கள் பொலிஸில் சரண்!

[டாக்கா]

பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் அரசாங்கத்தின் அமைச்சர் சர்தார் அம்ஜத் ஹுசைன் நேற்றுமுன்தினம் பொலிசாரிடம் சரணடைந்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஜனாப் அனிசுல் இஸ்மத்முகமத் ஏற்கனவே பொலிசாரிடம் சரணடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

லஞ்சம், ஊழல் மற்றும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## ராஜீவ் கொலை குறித்து மூவர் தேடப்படுகிறார்கள்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக இரு ஆண்களும் ஒரு பெண்ணும் தமிழகப் பொலிசாரால் தொடர்ச்சியாக தேடப்பட்டு வருகிறார்.

விரைவில் இவர்கள் கைது செய்யப்பட்டு விடுவார்கள் என்று பொலிசார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட மூவரும் கைது செய்யப்படும் பட்சத்தில் ராஜீவ் கொலையில் புதிய திருப்பம் ஏற்படலாமென பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (க)

### துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

மன்னார் சூரியகட்டைக்காடு கிராமத்திற்கு வீடு பார்க்கச் சென்றவர்கள் மீது நானாட்டான் முகாம் இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

### மாவீரர் நினைவாக விளையாட்டுப் போட்டி

[பருத்தித்துறை]

யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த வடமராட்சிப் போராளிகளின் நினைவாக விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவின் ஆதரவுடன் தும்பளை இளைஞர்கள் ஆகஸ்ட் மாதம் 4ம், 5ம் திகதிகளில் தும்பளை கணக்கிலாவத்தை மைதானத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

### அமைதிவேண்டிப் பூசை

[வேலணை]

நாட்டின் அமைதி சுபீட்சம் வேண்டி இன்று புங்குடுதீவு கேரதீவு ஐயனார் ஆலயத்தில் விசேட பூசைகளும் வழிபாடுகளும் நடாத்தப்படவுள்ளன. (75)

### விடுதலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிட்டு அரசாங்கத்தினால் ஒரு தலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும்யுத்த நிறுத்தம் பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

### கப்டன்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இயக்கப்போராளி வீரமரணமடைந்தார்.

கப்டன் ரமேஷின் புகழுடல் நேற்று பொதுமக்களின் அஞ்சலிக்காக அச்சுவேலியில் வைக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலியைத் தொடர்ந்து கப்டன் ரமேஷின் புகழுடல் இராணுவ மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாக்கப்பட்டது.

வீரமரணமடைந்த ரமேஷிற்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### மற்றொரு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் இவரது கொலைபற்றிய எதுவித தகவல்களும் இதுவரை பெறமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது கொலை குறித்து பொலிசார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

### வடக்கு-கிழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாக அறியவந்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு வெற்றியளிக்காது. இதுவரை காலமும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் வடக்கு-கிழக்குப் பகுதிகளை முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியாதுபோய் விட்டது என்ற நிலையும், இராணுவ அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

எனவே, இலங்கைப் பிரச்சனையில் வெளிநாடு ஒன்று தலையிடுவதற்கு முன், இராணுவ நடவடிக்கைகளைத் தவிர்த்து, பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வு ஒன்றையே காண முயற்சிக்க வேண்டும். அல்லது இலங்கைக்குள் வெளிநாடு ஒன்றின் தலையீடு ஏற்படும் நிலையைத் தவிர்க்கமுடியாது போய்விடுமெனவும் ஜனாதிபதி இராணுவ அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

### வடமேற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டத்தைக் கட்டுப்படுத்தவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

### விசாரணை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டு பேணப்பட்டுவருகிறது.

இக்கொலை தொடர்பான விசாரணை முடிவடையும்வரை இவரது உடல் பேணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையின் பின்னர் இச்சடலம் புதைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### நான்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், மூவரைக் கைதுசெய்தும் உள்ளனர்.

பொரியபோரதீவில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோவினரும் இணைந்து நேற்று முன்தினம் பழுகாமம் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர்.

காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை இடம்பெற்ற இச்சுற்றிவளைப்பின்போது இரு இளைஞர்களும், ஒரு குடும்பஸ்தரும் வெட்டிக் கொல்லப்பட்டதுடன், மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை கடந்த 25ம் திகதியும் இப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினரால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81.